[1972 மார்ச் 17

பஞ்சாலை கார்ப்பரேஷன்

* 541 வின.—திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக பஞ்சாலை கார்ப்பரேஷன் தன் நிர்வாகத்தில் எடுத்துக் கொண்டுள்ள பஞ்சாலைகளை நடத்துவதற்காக தேசிய பஞ்சாலை கார்ப்பரேஷனிடமிருந்து இன்னும் வரவேண்டிய பணம் எவ்வளவு?

(இ) அந்தப் பணத்தைப் பெறுவதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) தமிழக பஞ்சாலை கார்ப்பரேஷன் கணக்கின்படி எடுக்கப்பட்ட நூற்பு ஆலைகளின் வேண்டிய மொத்த நடைமுதல் ரூ. 97.40 இலட்சங்கள். இதில் தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷனின் பங்கான 51 சதவிகிதத்தில் இதுவரை கொடுத்தது போக இன்னும் ரூ. 19.83 இலட்சங்களி வரவேண்டியிருக்கிறது. தேசிய பஞ்சாலைக் கார்ப்பரேஷனையும் மத்திய அரசையும் மீதி வரவிற்காக அணுகப்பட்டிருக்கிறது.

Houses for Government servants in Perambalur Town

* 542 *Q*.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Government have any proposal to construct houses in Perambalur Town, Tiruchirappalli district for Government Servants and low income group people; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

Dr. H. V. HANDE: Are the Government aware that there is an area available in Perambalur, about 9 acres and several associations have recommended to Government and Collector is also seized of the matter? May I know whether it is not a fact that an area of 9 acres owned by the local Madanagopalaswamy temple is available for construction of houses and the Revenue Department have sent proposal for construction of houses and if so what is the action taken by Government?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தற்பொழுது பெரம்பலூரிலே வீடு கட்டுவதற்குத் திட்டம் இல்லை. ஆனால் அரசு எந்த எந்த இடங்களிலே வீடுகளைக் கட்டலாம் என்று ஒரு அறிக்கை தமிழ்நாடு வீட்டு

வசதி வாரியத் தலைவரிடமிருந்து கேட்கப்பட்டது. அந்தத் தலைவர் அவர்கள் 24 இடங்களை தமிழ்நாட்டிலே தேர்ந்தெடுத்து திட்டத்தை அனுப்பியிருக்கிறார்கள். அந்த 24 இடங்களில் பெரம்பலூர் ஒரு இடமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடலூருக்கு அறுவை மில்

* 543 வினா.—திரு. கு. அ. பொம்மன்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூரில் மரம் அறுவை மில் (Saw Mill) ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, கூடலூரிலே ஏராளமாக மரம் கிடைக்கிறது. அந்த மரங்களையெல்லாம் கள்ளிக்கோட்டைக்குக் கொண்டு சென்றுதான் அறுவை செய்கிறார்கள். எனவே, கூடலூரிலேயே ஒரு மர அறுவை மில் ஏற்படுத்துவதன்மூலம் வேலைவாய்ப்புக் கொடுக்கலாம், நல்ல லாபம் கிடைக்கும். எனவே அதை ஏற்படுத்த அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அரசுத் துறை மூலமாக அறுவை மில் வைக்கப்படவில்லை. ஆங்காங்கு தனியார்கள் வைத்திருக்கிறார்கள். தனியார் துறையில் வைக்க யாராவது முன்வந்தால் அதற்கு உதவி செய்வதுபற்றி கவனிக்கப்படும்.

கரடிகுளத்திலுள்ள வனத்துறை நிலங்கள்

* 544 வினா.—திரு. எம். முத்தையா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தாலுக்காவைச் சார்ந்த கரடிகுளம் வன இலாகாவில் 1,000 ஏக்கர் நிலங்கள் ரொம்பவும் பயனற்று இருப்பதால் அந்த நிலங்களை ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: கோவில்பட்டி தாலுக்காவைச் சார்ந்த கரடிகுளம் காட்டுப் பகுதியின் மொத்தப் பரப்பு 1,229.03 ஏக்கர். இதில் சுமார் 725 ஏக்கர் நிலத்தை, இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களின் மறுவாழ்வுக்காக, வருவாய்த் துறைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதியுள்ள